Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

THURSDAY, JULY 15, 2021

வியாழக்கிழமை ஜூலை 15, 2021 | ஒளி: 07 கதிர்: 48 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



# சிற்றாலயங்கள் மீது தாக்குதல்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்று இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீது, நேற்று (14) அதிகாலை, இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மன்னார், வயல் வீதி பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் இரண்டு சொரூபங்களும் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சொரூபம் ஒன்றுமே, இவ்வாறு கற்கள் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக் கூடுகள் உடைந்து சேதமாகியுள்ளன.

இது தொடர்பில், மன்னார் பொலிஸார், 'சோகோ' பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம், திங்கட்கிழமையும் (12) செவ்வாய்க்கிழமையும் அதிகாலை, மேலும் மூன்று சிற்றாலயங்கள் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேட்பாளர் கட்டுப்பணத் தொகையில்

# அதிரடித் திருத்தம்

### மூன்று மில்லியன் வரை அதிகரிக்க யோசனை

அத்தியாவசிமற்ற வகையில் வேட்பாளர்கள், தேர்தல்களில் போட்டியிடுவதைத் தவிர்க்கும் வகையில், தேர்தல்களில் போட்டியிடும் போது, வேட்பாளர் செலுத்தவேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான அமைச்சரவைப் பத்திரமும் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது.

இதனடிப்படையில், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் செலுத்தவேண்டிய கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தேர்தல்களில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர்கள் மாத்திரம், கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென்ற நடைமுறையே தற்போது இருக்கின்றது.



இந்த நடைமுறையை அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கும் வேட்பாளர்களும் செலுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பிலும், ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் சுயாதீன வேட்பாளர் ஒருவர் 75,000 ரூபாயை கட்டுப்பணமாக செலுத்தவேண்டும். இந்த நடைமுறையே தற்போதும் அமலிலுள்ளது.

தொடர்ச்சி P2

## 'பூச்சாண்டிகளைப் புறந்தள்ளி கடலட்டை குஞ்சு வளர்ப்போம்'

### கௌதாரிமுனையிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கௌதாரிமுனை கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திருந்த நிலையில், அந்நிலையத்தை பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெற்றுப் பூச்சாண்டிகளால் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. நியாயமான கருத்துகள் இருக்குமாயின் அவை பரிசீலிக்கப்படும் என்றார்.



தொடர்ச்சி P2

## அங்கு ஏற்றிக்கொள்ளாது இங்கு குத்திக்கொண்டார்

ஜே.வி.பியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, கொவிட்-19 தடுப்பூசியை, நேற்று (14) ஏற்றிக்கொண்டார்.

கொழும்பு, பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள சாந்தி மன்ற விஹாரையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பூசி மையத்திலேயே அவர், தடுப்பூசியை செலுத்திக்கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்



தொடர்ச்சி P2



## முகத்துக்கு நேரே எச்சரித்தார் செந்தில் தொண்டமான்

தோட்ட நிர்வாகங்களின் நடவடிக்கைகளை உடனடியாக தொழில் அமைச்சு அவதானிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின்

தொடர்ச்சி P2

## செப்டெம்பருக்குள் நாடு திறக்கப்படும்

பெரிதாக எதுவும் நடக்கவில்லை எனின், செப்டெம்பர் மாதத்துக்குள் நாட்டை முழுமையாகத் திறக்க எதிர்பார்த்துள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் கொரோனா



தொடர்ச்சி P2

## 2ஆம் மாடி ஜன்னலின் மீதேறி துமிந்த எதிர்ப்பு

தன்மைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையமொன்றில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் முன்னிலை சோசலிஷக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ, அங்கு எதிர்ப்பு நடவடிக்கையில் நேற்று (14) ஈடுபட்டிருந்தார்.



தொடர்ச்சி P2

## 298 குடும்பங்களுக்கு காணி உறுதி

ஏ.எம்.ஏ.பரீத், ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை காலமும் காணி அனுமதிப்பத்திரமின்றி வசிக்கும் 298 குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள், நேற்று (14) வழங்கிவைக்கப்பட்டன. கோமரங்கடவெல மத்திய மகா வித்தியாலயக் கேட்போர்




தொடர்ச்சி P2

## 'டொலரை அரசாங்கம் விழுங்கிவிட்டது'

ஐக்கிய அமெரிக்க டொலர் பிரச்சினையிலிருந்து அரசாங்கத்தால் தலையைத் தூக்கிக்கொள்ள முடியவில்லையெனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கம் டொலரை விழுங்கிவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

"டொலர், கையிருப்பு இன்மையால், கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருக்கும் எரிபொருள் அடங்கிய கப்பலும்



தொடர்ச்சி P2

## சிங்கம் குணம்

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான சிங்கம் தற்போது பூரணமாகக் குணமடைந்துள்ளது என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், "கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மற்றைய சிங்கமும் குணமடைந்து வருகிறது" என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார். இதேவேளை, தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ஏனைய விலங்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில், அந்த விலங்குகளுக்கு



தொடர்ச்சி P2

## 'வரப்பிரசாதங்களுக்காக பணயம் வைக்கின்றனர்'

வரப்பிரசாதங்களுக்கும் சில வசதிகளுக்காகவும் மக்களை பணயம் வைத்து, அவர்களின் உயிரைக் கருத்திற்கொள்ளாமல் ஆர்ப்பாட்டங்களை சிலர் நடத்துகின்றனர் எனத் தெரிவித்துள்ள பெண்கள் மற்றும் சிறுவர் மேம்பாடு, பாலர் பள்ளிகள் மற்றும் ஆரம்பக்கல்வி பாடசாலைகள் உட்கட்டமைப்பு



தொடர்ச்சி P2

## 'ஹரின் எம்.பியை பிடிக்க மாட்டோம்'

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரை கைது செய்யப்படமாட்டார் என உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்று (14) கொண்டுவரப்பட்டது.



தொடர்ச்சி P2

## 5.45க்கு புறப்பட்ட இ.போ.ச பஸ் ஈரப்பெரியகுளத்தில் சிக்கியது



எம்.றொசாந்த், க. அகரன்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# அதிரடி திருத்தம்

அங்கிரிக்கப்பட்ட அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாபதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரால் 50,000 ரூபாய் கட்டுப்பணம் தற்போது செலுத்தப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த கட்டுப்பணத் தொகையை 3 மில்லியன் ரூபாய் வரை அதிகரிக்குமாறு அமைச்சரவைப் பத்திரத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்நிலையில், தேர்தல்களில் செலுத்தப்படும் கட்டுப்பணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில், அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் தொடர்பில், தாங்களும் அறிந்து கொண்டதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்களில் அத்தியாவசியமின்றி வேட்பாளர்கள் களமிறங்குவதைத் தடுக்கும் வகையிலும் பொதுமக்களின் பெருமளவு பணம் வீணாக செலவிடப்படுவதைத் தடுக்கும் வகையிலேயே கட்டுப்பணத் தொகையில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## அங்கு ஏற்றிக்கொள்ளாது; இங்கு குத்திக்கொண்டார்

பாராளுமன்ற பணியாட் தொகுதியினருக்கும், பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் வைத்தும் இராணுவ வைத்தியசாலையில் வைத்தும் கொரோனா தடுப்பூசிகள் கடந்த காலங்களில் ஏற்றப்பட்டன.

எனினும், அவ்விரு இடங்களிலும், அனுரகுமார திஸாநாயக்க, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 298 குடும்பங்களுக்கு காணி உறுதி

கூடத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோராள ஆகியோரின் இணைத் தலைமையில், இந்நிகழ்வு நடைபெற்றது.

அடம்பனை கிராமத்தில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியின்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளுள் பல நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

“நீண்டகாலமாக தாம் வசிக்கும் காணி அனுமதிப்பத்திரம் இன்றி சிரமப்பட்டதாகவும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் எங்களுக்கென்ற காணியுரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்கியமைக்காக, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றிகள்” என பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

“தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான கடனை வங்கிகளில் கூட பெற முடியாத நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். இனி அந்தப் பிரச்சினை கிடையாது. ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இதற்கும் மேலதிகமாக மக்களது வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் இதன் பிரதிபலனாக மக்களது வருமானம் உயர்வடைந்து வாழ்க்கைத்தரம் மேம்படும்” என்றும் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராள இதன்போது தெரிவித்தார்.

## 5.45க்கு புறப்பட்ட இ.போ.ச பஸ் ஈரப்பெரியகுளத்தில் சிக்கியது

வடபிராந்தியத்துக்கான இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று, வவுனியா-ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டது.

அத்தியாவசியத் தேவைகளின்றி பயணித்தவர்களை ஏற்றிச் சென்றதன் காரணமாகவே, இந்த பஸ் திருப்பி அனுப்பப்பட்டது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை வரும் 24ஆம் திகதிவரை நடைமுறையில் உள்ள நிலையில், அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் அத்தியாவசியத் தேவை உடையவர்கள் ஆகியோர் மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்காக பஸ் மற்றும் ரயில் சேவைகளுக்கு, நேற்று (14) தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதியளிக்கப்பட்டது.

அதனடிப்படையில், யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து, நேற்று அதிகாலை 5.45 மணிக்கு, இ.போ.ச பஸ் ஒன்று கொழும்பு நோக்கிப் பயணித்தது.

இதன்போது, குறித்த பஸ், வவுனியா - ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, பயணித்தவர்களில் பலர் தங்களுடைய அத்தியாவசியத் தேவைகளை உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர்.

அதனால் அத்தியாவசிய தேவைகளின்றிய பயணிகளை ஏற்றிச் சென்றதாகக் கூறி, குறித்த பஸ், ஈரப்பெரியகுளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டது.

## ‘டொலரை அரசாங்கம் விழுங்கிவிட்டது’

சிக்கிக்கொண்டுள்ளது” என்றும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களுடன் வந்திருக்கும் அந்தக் கப்பலுக்கு டொலரை செலுத்தாவிடின், எரிபொருள்களை எடுத்துக்கொண்டு திரும்பிச் சென்றுவிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

இலங்கை தற்போது அந்நிய செலாவணி பற்றாக்குறையை மையமாகக் கொண்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. தற்போது நமது அந்நிய செலாவணி இருப்பு 4 பில்லியன் டொலர்களாகும். ஆண்டின் நடுப்பகுதியில் 1 பில்லியன் டொலர் பத்திரக் கடனை செலுத்தவேண்டும். அதனை செலுத்திய பின்னர், கருவூலத்தில் 3 பில்லியன் டொலர் இருப்பு மட்டுமே உள்ளது என்றார்.

## முகத்துக்கு நேரே எச்சரித்தார் செந்தில் தொண்டமான்

இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், இல்லாவிட்டால் தொழிலாளர்களும் தோட்ட நிர்வாகங்கள் பின்பற்றும் அதேபோக்கை கடைப்பிடிக்கும் சூழ்நிலையே உருவாகுமென எச்சரித்துள்ளார்.

“சம்பள நிர்ணய சபையின் முடிவுகளுக்கு எதிராக தோட்ட நிர்வாகங்கள் தொடர்ந்து செயற்படும் பட்சத்தில் தோட்ட நிர்வாகங்கள் கடைப்பிடிக்கும் அதேபோக்கிலேயே தொழிலாளர்களும் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும்” என சுட்டிக்காட்டினார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனை குழுக்கூட்டம், தொழில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தலைமையில் தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தொழில் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், சட்டத்தரணி மாரிமுத்து, தொழில் ஆணையாளர் மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தோட்டங்களில் கைக் காசுக்கு பணிபுரிபவர்களுக்கு 1,000 வழங்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. எனினும், 700 ரூபாயே வழங்கப்பட்டு வருகிறது. பல தோட்டங்களில் 20 கிலோகிராமுக்கு கீழ் கொழுந்து எடுத்தால் ஒரு கிலோகிராமுக்கு 40 ரூபாயின் பிரகாரமே கணக்கு முடிக்கப்படுகிறது என்றும் செந்தில் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் சம்பள நிர்ணய சபையின் முடிவுக்கு எதிராக தோட்டங்களில் சம்பளம் வழங்கப்படுவதுடன், இதற்கு தனியொரு சட்டத்தையும் வகுத்து வருகின்றனர்.

“கொரோனா தொற்றுக்காலம் என்பதால் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ள முடியாதென்ற சூழ்நிலையை அவர்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி கம்பனிகள் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றனர்” என்றும் எடுத்துரைத்தார்.

இந்த விவகாரத்தில் தொழில் அமைச்சு உடனடியாக தலையிட்டு தொழிலாளர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் தோட்ட நிர்வாகங்கள் கடைப்பிடிக்கும் அதே போக்கையே தொழிலாளர்களும் கடைப்பிடிக்க நேரிடும் என எச்சரித்த செந்தில் தொண்டமான், அவ்வாறான சூழல் எழுந்தால் எந்தவொரு தோட்டத்தை தோட்ட நிர்வாகங்களால் நிர்வாகிக்க முடியாது போகுமெனவும் தெரிவித்தார்.

## ‘வரப்பிரசாதங்களுக்காக பணயம் வைக்கின்றனர்’

மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, நாட்டில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஜனநாயக உரிமை. கட்சிகளுக்கும் இந்த உரிமையுள்ளது. எனினும், அவர்கள் யாருக்காக இதனை செய்கிறார்கள் என்பதே முக்கியம் என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்வதற்கே சிலர், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனவே, பிள்ளைகளின் வாழ்க்கையுடன் விளையாட வேண்டாம் என, தொழில்சார் ஆசிரியராகவும் தந்தையாகவும் அமைச்சராகவும் கோரிக்கை விடுகின்றேன் என்றார்.

ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பவர்கள் அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக மாறக்கூடாதென வேண்டுகோள் விடுத்த அவர், கொரோனா தொற்றால் பிள்ளைகளுக்கான கல்வியை உரிய முறையில் வழங்க முடியாதவகையில், நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. கல்வியை முறையாக வழங்கமுடியாவிடின் அது கொரோனா மரணத்துக்கு சமனானது என்றார்.

“ஆகையால், பிள்ளைகளை நினைத்தாவது சில தீர்மானங்களை உரிய தரப்பினர் முன்னெடுக்க வேண்டும்” என்றார்.

இதேவேளை பாடசாலைகள் திறக்கப்படும் சரியான திகதி குறித்து அறிவிக்க முடியுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

அனைத்து ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி செலுத்திய பின்னர்,விசேட கலந்துரையாடலை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், அடுத்த ஒன்றரை மாதத்துக்குள் பாடசாலைகளைத் திறக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

“கொரோனா நெருக்கடி என கூறி பாடசாலைகளை தொடர்ந்து மூடி வைத்து, மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்க்கையுடன் விளையாட முடியாது. எனவே ,மாணவர்கள் இழந்த கல்வி சந்தர்ப்பத்தை மீண்டும் திட்டமிட்டபடி வழங்க எதிர்பார்த்துள்ளோம்” என்றார்.

## ‘செப்டெம்பருக்குள் நாடு திறக்கப்படும்’

தடுப்பூசியின் முதல் டோஸை செப்டெம்பர் மாதத்துக்குள் வழங்கி முடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

இந்நிலையில், 1.7மில்லியன் அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசி டோஸ்கள், எதிர்வரும் 22 ஆம் திகதி நாட்டுக்குக் கிடைக்கவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களில் 57 மில்லியன் பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், மேல் மாகாணத்தில் வசிக்கும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு இம்மாதக் கடைசிக்குள் தடுப்பூசி செலுத்தி முடிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## ‘ஹரின் எம்.பியை பிடிக்க மாட்டோம்’

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் அவரை கைது செய்வதற்கான ஏற்பாடுகள், ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், தாம் கைது செய்யப்படுவதை தடுத்து உத்தரவிடுமாறு கோரி, ஹரின் பெர்ணான்டோ எம்.பியினால், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு, தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு, நேற்று (14) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, குமுதினி விக்ரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில், சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், நீதிமன்றத்தின் கவனத்துக்கு மேற்கண்டவாறு கொண்டுவந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவிடம் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் வாக்குமூலம் பதிவு செய்து, தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இந்நிலையில், இந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ‘பூச்சாண்டிகளை புறந்தள்ளி கடலட்டை குஞ்சு வளர்ப்போம்’

இலங்கை- சீன கூட்டு நிறுவனத்தினால் கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு வளர்க்கும் நிலையத்தை, நேற்று (14) பார்வையிட்டார். அங்கிருந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதன் மூலம் எமது பிரதேச மக்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புக்களையும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில், ஆய்வு ரீதியாகப் பொருத்தமான இடங்களை தெரிவு செய்து பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது” என்றார்.

கடந்த ஒன்றரை வருடங்களில் நூற்றுக்கணக்கான பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆயிரக்கணக்கான பண்ணைகளை உருவாக்க திட்டமிடப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த அவர், இவ்வாறான பண்ணைகளுக்கு இலட்சக்கணக்கான கடலட்டை குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்து வளர்க்க வேண்டிய தேவையுள்ளது என்றார்.

2016, 2017 காலப் பகுதியில் அப்போதைய அரசாங்கத்திடம் அனுமதிகளை பெற்று, அரியாலையில் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தை இலங்கை -சீனக் கூட்டு நிறுவனம் அமைத்த கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தை கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான சட்ட ரீதியான அனுமதிகளை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்றார்.

கடலட்டைப் பண்ணையைப் பொறுத்தவரையில் அவசியமான அனுமதிகளைப் பெற்று செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியேற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, நாரா - நக்டா - கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்று மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாது என்று அடையாளப்படுத்தப்படுகின்ற இடங்களில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு தழுவல் அடிப்படையிலான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கௌதாரிமுனை கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையம் தொடர்பாக அரசியல் நோக்கத்தோடு மக்களைக் குழப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இவ்வாறான சுயநலப் பூச்சாண்டிகளினால் தன்னுடைய மக்கள் நலச் செயற்பாடுகளை தடுக்க முடியாது என்றார்.

## 2ஆம் மாடி ஜன்னலின் மீதேறி துமிந்த எதிர்ப்பு

கண்டி - பல்லேகலயில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திலேயே அவர் தனிமைப்படுதப்பட்டுள்ளார். அந்நிலையத்தின் கட்டடமொன்றின் இரண்டாம் மாடியிலிருந்து இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

“தமக்கு பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள போதிலும், இதுவரை முடிவுகள் கிடைக்கவில்லை” என கோஷமெழுப்பியுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையத்தில், காரணம் இன்றி தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்,து பதாகையை ஏந்தியவாறு எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளார்.

அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கான தொழில் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, துமிந்த நாகமுவ உள்ளிட்ட தரப்பினர் அத் திணைக்களத்துக்கு முன்பாக கடந்த 7ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, துமிந்த நாகமுவ உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பிணை வழங்கப்பட்டதன் பின்னர் இவர்கள் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கம் குணம்

கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பின்னவலை திறந்த மிருகக்காட்சி சாலை மற்றும் ஹம்பாந்தோட்டை சஃபாரி பார்க் ஆகியவற்றிலுள்ள விலங்குகளுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிவதற்கு வைத்தியக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் வைத்தியர் தெரிவித்தார்.

## கழுத்தறுத்து கொல்லப்பட்ட காவலாளிக்கு கொரோனா

6.ஹிரான் பிரியங்கரஜயசிங்க

கழுத்தறுத்து கொலைசெய்யப்பட்ட வனாத்தவில்லு- மங்களபுர பிரதேசத்தில் தனியார் தோட்டத்தின் காவலாளிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதென, புத்தளம் ஆரம்ப வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

புத்தளம் ஆரம்ப வைத்தியசாலையில் நேற்று (14) முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின் போதே கொலையுண்டவருக்கு இத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த காவலாளி தங்கியிருந்த



தற்காலிக காவல் குடிசையிலிருந்தே நேற்று (14) அதிகாலை இவர், சடலமாக மீட்கப்பட்டாரென்றும், தனிப்பட்ட தகராறே கொலைக்கு காரணமாக இருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

எனினும் இந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணவருடன் விளையாடிய மனைவிக்கு சிக்கல்



தனது கணவரின் கணினிக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்கவும், அதிலிருந்து தகவல்களைப் பதிவிறக்கம் செய்வதற்காகவும் கணவரின் மேசைக்கு கீழ், கண்காணிப்பு உபகரணத்தைப் பொருத்திய சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட மனைவிக்கு, இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தான் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில், தனது மனைவி தன்னுடைய தனிப்பட்ட கணினியை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, அதிலுள்ள தகவல்களைப் பதிவிறக்கம் செய்துள்ளதுடன், இதற்காக இரகசிய கண்காணிப்பு உபகரணங்களைப் பொருத்தியுள்ளதாகவும் பிரதிவாதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில், குறித்த தம்பதியினரின் விவாகரத்து வழக்கு, தற்போது நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த முறைப்பாட்டாளர், கொழும்பிலுள்ள அரசாங்க வைத்தியசாலையின் வைத்தியர் என்றும் அவரது மனைவி மாகாணமொன்றின் வைத்தியசாலையொன்றின் வைத்திய நிபுணர் என்றும் தெரியவருகின்றது.

தன்னிடமிருந்து பிரிந்து வாழும் தனது மனைவி, தனது அனுமதியின்றி தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி, பூட்டியிருந்த தனது அறைக்குள் சென்று, கணினியில் இருந்த வட்சப் செயலியிலுள்ள தகவல்களைப் பதிவிறக்கம் செய்துள்ளாரென்றும் தனக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கிலேயே மனைவி இவ்வாறு செயற்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளரான கணவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கணினி குற்றச்சட்டத்தின் 3 மற்றும் 4ஆம் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒருவரின் அனுமதியின்றி கணினிக்குள் பிரவேசித்தல், தகவல்களை சேகரித்தல், கண்காணிப்பு உபகரணங்களைப் பொருத்துதல் என்பன 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க கணினி குற்றச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றம் என்றும் முறைப்பாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முறைப்பாட்டாளர் சார்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு மற்றும் சத்தியக் கடதாசி என்பவற்றை ஆராய்ந்த கல்கிஸ்ஸ மாவட்ட நீதவான் டி.எம். கொடிதுவக்கு, முறைப்பாட்டாளரின் கணினி அல்லது வேறு மின்னனு சாதனங்களிலுள்ள தகவல்களைப் பெறல் அல்லது அதன் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேறு முறைகள் அல்லது கண்காணிப்பு உபகரணங்களைப் பொறுத்துதல் என்பவற்றை தடைசெய்து, இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## மனித – யானை மோதலை கட்டுப்படுத்தும் திட்டம்



மனித - யானை மோதலை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கமைய, யானை வேலிகளை பராமரிப்பை, உள்ளூர் பங்குதாரர்களின் பங்களிப்புடனும் தன்னார்வ படையணியிடமும் வழங்கும் ஆரம்பத் திட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

காட்டு யானை - மனித மோதலை கட்டுப்படுத்துவதற்கு மின்சார வேலிகளை அமைப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் மேற்படி பணித்துள்ளார்.

இத்திட்டத்தை, குருநாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலிருந்து ஆரம்பிக்குமாறும் பிரதமர் தெரிவித்தார்.

வனஜீவராசிகள் பாதுகாப்பு அல்லது சிவில் பாதுகாப்புத் திணைக்களங்களுக்கு மாத்திரம் இதன் ஒட்டுமொத்த பொறுப்பும் சுமத்தப்படாத வகையில், பிரதேச செயலாளர் அலுவலகம், விவசாய சேவைகள் திணைக்களம், மகாவலி அதிகார சபை மற்றும் கிராம சேவகர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் கிராம சமூக அமைப்புகள் உள்ளிட்ட தன்னார்வ படையணிகள் ஊடாக இந்த மனித - யானை மோதலைக் கட்டுப்படுத்த முடியுமென பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டில் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தேசிய வேலைத்திட்டமாக 1,500 கிலோமீற்றர் மின்சார வேலி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை அதற்கான மூலப்பொருள் கொள்வனவு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன், 19 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் முப்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், பிரதேச வன ஜீவராசிகள் அலுவலகம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகம் என்பன யானை வேலி அமைப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

இதுவரை அமைக்கப்பட்டுள்ள 4,500 கிலோமீற்றர் வரையான யானை வேலிகளை பராமரிப்பதற்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 3,900 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், பல்நோக்கு மேம்பாட்டுத் திணைக்களத்தின் 1,500 பேரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் எனவும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்தது.

நிகழ்நிலை கற்பித்தலில்

## மூன்றாவது நாளாகவும் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பு

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுடைய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடின் தொடர்ந்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் சேவை சங்கங்களின் தலைவர்களைப் பலவந்தமாகத் தனிமைப்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 14 சங்கங்கள் இணைந்து இவ்வாறு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.

குறித்த ஆசிரியர் சேவை சங்கத்தின் சில உறுப்பினர்களுக்கு நீதிமன்றத்தால், பிணை வழங்கப்பட்ட போதிலும் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

தமது சம்பள வேறுபாட்டுக்கான தீர்வு காணப்படுவதுடன், அதற்கான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளத் தாம் தயாராகவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், பேச்சுவார்த்தைக்கு அவகாசம் வழங்காது, அரசாங்கம் தொடர்ந்தும் இதனை பிற்போடுமானால் தமது தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுக்க நேரிடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.




பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட அனுஷ பெல்பிட, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து நேற்று (14) அலரி மாளிகையில் வைத்து தனது நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

## 'மத்திய அதிவேக நெடுஞ்சாலை பணிகளை துரிதப்படுத்தவும்'



மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தையிலிருந்து மீரிகம வரையான பகுதியின் பணிகளைத் துரிதப்படுத்துமாறு, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடவத்தையிலிருந்து மீரிகம வரையான பகுதியை விரைவில் மக்களிடம் கையளிப்பதையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளதாகவும் எனவே உரிய தினத்துக்குள் வேலைகளை நிறைவு செய்வதற்காக தற்போதிருந்தே திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்படுமாயின், இரவிலும் பணிகளை முன்னெடுத்து, குறித்த காலத்துக்குள் நெடுஞ்சாலைப் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் என தெரிவித்து

## பண மோசடி; மூவர் கைது

பொலிஸார் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றி பணம் மற்றும் தங்க நகைகளை பறித்த மூவர் வத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரிடமிருந்து பொலிஸ் உத்தியோகத்தரின் அடையாள அட்டையை போன்ற போலி அடையாள அட்டையொன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குருநாகல் மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 40 கிராம் தங்கம், 2 மோட்டார் சைக்கிள்கள், 2 கைவிலங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் போலி அடையாள அட்டையை மக்களிடம் காண்பித்து, கைவிலங்கிட்டு, சன நெரிசல் குறைந்த பகுதிக்கு அழைத்துச்சென்று வைத்து அவர்களின் பணம், மற்றும் தங்க நகைகளை அவர்கள் கொள்ளையிட்டுள்ளனர்.

வத்தளை, கொழும்பு, முகத்துவாரம் மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பகுதிகளில் இவ்வாறான 17 கொள்ளைச் சம்பவங்களுடன் சந்தேகநபர்கள் தொடர்புபட்டுள்ளதாக ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் புறநகரில்

## குடிநீர் வழங்குவதில் விசேடமான படிமுறை




கொழும்பு நகரம் மற்றும் அதன் புறநகரிலுள்ள மக்களுக்கு குடிநீர் வழங்குவதில் விசேடமான படிமுறையொன்றை, நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை நிறைவேற்றியுள்ளது.

அம்பத்தலை நீர் வழங்கல் அமைப்பை மேம்படுத்தல் மற்றும் எரிசக்தி மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் ஊடாக, கொழும்பு நகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் காணப்படும் தொடர்ச்சியான நீர்வெட்டுக்களை சுமார் 90% ஆல் குறைத்து அதிக திறன் கொண்ட சுத்தமான குடிநீரை தொடர்ந்து வழங்குவதற்கு விசேடமான படிமுறையொன்றை நிறைவேற்றியுள்ளது.

நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவா நாணாயக்காரவின் ஆலோசனையின் பேரில் மிகவும் முன்னுரிமையளித்து சுமார் 100 மில்லியன் ரூபாய் செலவில் இக்கருத்திட்டம் விரைவாக நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அம்பத்தலை நீர் வழங்கல் அமைப்பு மேம்பாடு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு கருத்திட்டத்தின், கருத்திட்ட பணிப்பாளர் பொறியாளர் ஜி.யு. ரஞ்சித்,

"தற்போது கொழும்புக்கு நீர் வழங்குவது அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்தாகும். ஒரு நாளைக்கு ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் கன மீட்டர் வழங்கப்படுகிறது. மேலும், நாம் எதிர்பார்ப்பது, களனியின் தென் கரையில் உள்ள பியகம நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 50,000 கன மீட்டர் நீரை இந்த அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் கொழும்புக்கு வழங்குவதற்காகும்" எனவும் தெரிவித்தார்.

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் சுயதனிமையில்

சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத், அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளாரென, சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால், அலுவலக பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வைத்தியர் ஹேமந்த ஹேரத், கொரோனா தடுப்பூசி இரண்டையும் செலுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகக்கவசம் அணியுமாறு கூறிய

## காவலரை தாக்கிய இளைஞர்கள் கைது



தெஹிவளை ரயில் நிலையத்தில் இளைஞர்கள் சிலரை முகக்கவசம் அணிந்து ரயிலில் ஏறுமாறு கூறிய ரயில்வே பாதுகாவலர் மீது இளைஞர்கள் இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (13) இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்த, 20 மற்றும் 25 வயதுடைய இரு இளைஞர்கள், நேற்று (14) கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

## 5 விளையாட்டு சங்கங்களின் பதிவுகள் தற்காலிகமாக இரத்து

ஐந்து தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகளை, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தற்காலிகமாக இரத்துச் செய்து விசேட வர்த்தமானி வெளியிட்டுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம், இலங்கை ஜூடோ சங்கம்

இலங்கை ஸ்கிரப்பல் சம்மேளனம், இலங்கை சர்பிங் சம்மேளனம் மற்றும் இலங்கை ஜுஜிட்சு சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகளே இவ்வாறு இரத்தாகியுள்ளன.

இந்த அமைப்புகளுக்கு, ஜூலை 1 முதல் அமுலாகும் வகையில், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் எதிரிசூரிய அதிகாரம் பொருந்தியவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## உத்தியோக இல்லத்தில் இருந்து ரஞ்சன் நீக்கப்படவுள்ளார்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் உடைமைகள் அனைத்தும் பாராளுமன்ற உறுப்பினருக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக வழங்கப்பட்டிருந்த காலக்கெடு, கடந்த 20ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதாக நம்பகத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ரஞ்சன் ராமநாயக்கவின் உடைமைகள் அவருக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வீட்டில் வைக்கப்பட்டிருந்தன.

எனினும், அவற்றை அகற்ற மூன்று மாதம் அனுமதி வழங்குமாறு, அவரது சட்டத்தரணி, அமைச்சர் லொஹான் ரத்வத்தையிடம் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய அமைச்சர் லொஹான் ரத்வத்தை, சபாநாயகர் மஹிந்த யாப்பாவுடன் கலந்துரையாடல் மேற்கொண்டு, 3 மாதங்களுக்கு அங்கு உடைமைகளை வைக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் குறித்த 3 மாத காலப்பகுதி கடந்த 20ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்துள்ளதாக பாராளுமன்றத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்த விடயம் தொடர்பில் சபாநாயகருடன் எதிர்வரும் நாள்களில் கலந்துரையாடல் மேற்கொண்டு, தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'ஜெட் ஸ்கை ட்ரோன்' விசேட படைப்பிரிவு

பொலிஸ் விசேட அதிரடிப்படை சிறப்பு பணிக்குழு, 'ஜெட் ஸ்கை ட்ரோன்' என்ற விசேட படைப்பிரிவொன்றை நிறுவியுள்ளது.

இது தொடர்பான பயிற்சி, இலங்கை மோட்டார் படகுகள் சங்கத்தின் பயிற்சி நிலையத்தில் 16 பொலிஸ் விசேட அதிரடிப்படைகள் இணைந்து அண்மையில் நடைபெற்றது. இதில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், முத்துராஜவெல கடற்பகுதியில் தனது முதற் பணியைத் தொடர்ந்துள்ளார். இதன்போது, இந்தொனேசியாவிலிருந்து சட்டவிரோதமாக காய்ச்சிய 26 பீப்பாக்கள் மதுபானத்தையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.


தேவை

வெல்லம்பிட்டிய ஹோட்டலுக்கு மரக்கறிகளை வெட்டுவதற்கும், கை உதவியாளர்களும் தேவை. தங்குமிட வசதி உள்ளது. சம்பளம் 36,000 முதல் 50,000 வரை, அதற்கு மேல், 0779968930



அற்றோனி தத்துவத்தினை இரத்து செய்தல்

ஹிதகலை, பாயின்கமுவ, இல. 365 எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 535111693V உடைய நுகவியத்த கோராலகே தயா மெனிகே ஆகிய நான் ஹிதகலை, பாயின்கமுவ, இல. 365/B இல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 766591728V உடைய ஜயவீரஹன முதியன்சேலாகே பிரியந்தி ரேணுகா ஜயவர்தன அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. சுனில் சித்திரசேன மகதாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 15-03-2021 ஆம் திகதியுடைய அற்றோனி தத்துவத்தினை இத்தால் இரத்து செய்கின்றேன் எனவும் அவ் அற்றோனி தத்துவம் காரணமாக இதற்குப் பின்னரான எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் மக்களுக்கு இத்தால் அறியப்படுத்துகின்றேன்.

07 ஜூலை 2021
கண்டி

நுகவியத்த கோராலகே தயா மெனிகே

டெங்கு தடுப்பு ஊழியர்களை

# ‘சுகாதார துறையில் நிரந்தரமாக்கவும்’

## கல்முனையில் கவனயீர்ப்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான், நூருல் ஹுதா உமர்




கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு சுகாதார பணியாளர்களாகக் கடமையாற்றும் ஊழியர்கள், தமக்கு நிரந்தர நியமனம் கோரி, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் நேற்று (14) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சுகாதார அமைச்சின் கீழ், நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில், டெங்கு தடுப்பு பணியாளர்களாக தாம் கடமையாற்றி வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

“தற்போது அரசாங்கத்தின் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், எம்மையும் இணைத்துக் கொள்ள உள்ளதாகத் தகவல்கள் கிடைத்தன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்களுடைய சேவையோடு எம்மை இணைத்துப் பார்க்க வேண்டாம்.

“எமக்கான நியமனத்தை சுகாதார அமைச்சின் ஊடாக, சுகாதார துறையில் வழங்க வேண்டும். கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை நாம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். இன்றும் எமது பகல் நேர உணவு நேரத்தைத் தவிர்த்து, இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, எமது நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்க வேண்டும்” என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## சிசுவைக் கொன்று கொளுத்திய தாய்க்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்



திருகோணமலை, கந்தளாய் பகுதியில் பிறந்தவுடனேயே சிசுவொன்றைக் கொலை செய்து எரித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அச்சிசுவின் தாயை, இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதிமன்ற நீதவான் விசானி தேனவது, நேற்று முன்தினம் (13) மாலை உத்தரவிட்டுள்ளார்.

கந்தளாய், பேராறு, மத்ரஸாநகர் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரே, இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப்பெண்ணின் கணவர், நான்கு வருடங்களுக்கு முன்னர், வெளிநாடு சென்றிருக்கும் நிலையில், பிறிதொரு நபர் மூலம் ஏற்பட்ட தகாத உறவில் கிடைத்த சிசுவையே, இவர் கொலை செய்துள்ளார் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நேற்றைய விடுவிப்புகள்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், எச்.எம்.எம். பர்ஸான்



காத்தான்குடியில் முடக்கப்பட்டிருந்த மேலும் மூன்று கிராம சேவகர் பிரிவுகள், நேற்று (14) காலை 6 மணியுடன் விடுவிக்கப்பட்டன.

புதிய காத்தான்குடி வடக்கு 167ஏ, புதிய காத்தான்குடி தெற்கு 167சி, புதிய காத்தான்குடி கிழக்கு 167பி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட கிராம சேவகர் பகுதிகளில் போடப்பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டு, வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டதுடன், இயல்பு நிலையும் காணப்பட்டது.

காத்தான்குடியில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கடந்த மாதம் 23ஆம் திகதி எட்டு கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டன.

இதில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகள், கடந்த 8ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளும் நேற்று விடுவிக்கப்பட்டன.

பிறைந்துறைச்சேனை 206 சி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பரகத் வீதி, 2ஆம் குறுக்கு வீதி, அப்துல்லாஹ் வீதி ஆகிய பகுதிகளே 23 நாள்களின் பின்னர் விடுவிக்கப்பட்டன.

சேதனப் பசளை உற்பத்திக்கு

## ஏகமனதாகத் தீர்மானம்

■ ஏ.எம்.ஏ.பரீட்



தம்பலகாமம் பிரதேச சபையின் மாதாந்த சபை கூட்டம், தவிசாளர் ஏ.ஜீ. சம்பிக பண்டாரவின் தலைமையில் நேற்று (14) காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சேதன பசளை தயாரிக்கும் கோரிக்கை, தவிசாளரால் முன்வைக்கப்பட்டு, சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுத்துவதற்கும் இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நீதிமன்ற ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கவும்

■ தீஷான் அஹமட், ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு கொரோனா தடுப்பூசி வழங்குமாறு, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு, கடிதம் மூலம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது:

கொரோனா நெருக்கடியான காலப்பகுதியிலும், திருகோணமலை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள நீதிமன்றங்கள் இயங்குகின்றன. இங்கு தினமும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், திட்டமிட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் எனப் பலர் தொடர்புபடுவதால், இங்கு கடமையாற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகள், ஊழியர்கள் கொரோனா அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், நீதிமன்றங்களில் கடமையாற்றுபவர்களின் பாதுகாப்பு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இங்கு கடமையாற்றும் 150 பேருக்கு, முன்னுரிமை அடிப்படையில் கொரோனா தடுப்பூசியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

SLT MOBITEL நிறுவனத்தினால்

# உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு











முல்லைத்தீவு மாவட்டத்தில், கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனின் தலைமையில், கடந்த 9ஆம் திகதியன்று பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த செயற்திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 20 குடும்பங்களும், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் தலா 90 குடும்பங்களுமாக 200குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, தலா 1,700 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

“கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கள்ளப்பாடு தெற்கு மற்றும் தண்ணீரூற்று மேற்கில் தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்கு பிரதேச செயலங்களூடாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் SLT MOBITEL நிறுவன பொது முகாமையாளர் மற்றும் மாவட்ட முகாமையாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கட்டுத்துவக்குடன் இருவர் கைது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்




மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில், உயிலங்குளம் பகுதியில், கட்டுத்துவக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில், நேற்று முன்தினம் (13) இருவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் விசாரணைகளின் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

படையினர் மத்தியில்

## ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கொவிட் - 19 பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய பொறுப்பை நிறைவேற்றி, தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ள படையினர் மத்தியில், ஆரோக்கியத்தையும் சுகாதாரத்தையும் உறுதி செய்ய வேண்டுமென்று, கிளிநொச்சி மாவட்டப் பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டப் பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க, 573ஆவது பிரிகேட் மற்றும் அதன் கீழுள்ள கட்டளை அலகுகளுக்கான விஜயமொன்றின் போது, படையினர் மத்தியில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தொழில் வாழ்க்கையின் போது, பல்வேறு தொழில்முறை பயிற்சியின் முக்கியத்துவத்தையும் எல்லா நேரங்களிலும் ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

## வைத்தியர் உட்பட 12 பேருக்குத் தொற்று

■ மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்தில், நேற்று முன்தினம் (13) இரண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட வைத்தியர் உட்பட 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் அண்மைய நாள்களில் குறைந்திருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை, நேற்று முன்தினம் அதிகரித்துள்ளது. மேற்படி தொற்றாளர்கள் அனைவரும், சமூகத்திலிருந்து தொற்றுக்குள்ளானவர்கள் ஆவர் என, சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டிருப்பினும், சுகாதார நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்றும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நெடுங்கேணியில் சடலம் மீட்பு

■ விஜயரத்தினம் சரவணன்



வவுனியா வடக்கு, நெடுங்கேணி, பட்டுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இலங்கட்டிக்குள அணைக்கட்டுக்கு அருகில், நேற்று (14), ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணம் (வயது- 60) என்பவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நபர், நேற்று முன்தினம் (13) மாலை, மாடுகளைப் பார்ப்பதற்காகச் சென்றநிலையில், நேற்று (14) சடலமாக மீட்கப்பட்டுள்ளாரென, நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

## அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, கேப்பாப்புலவு விமானப்படைத் தளத்துக்குள் அமையப்பெற்றுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர் சங்க செயற்பாட்டாளர்களைப் பார்வையிடச் சென்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரிகள், நேற்று முன்தினம் (13) காலை கேப்பாப்புலவு விமானப்படைத்தளத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போதே, விமானப்படை வாசலில் நின்ற பாதுகாப்பு அதிகாரிகள் அதற்கான அனுமதியை மறுத்துள்ளார்கள்.

வீட்டை உடைத்து

## திருடிய இருவர் கைது

■ எஸ்.நிதர்ஷன், எம்.றொசாந்த்



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், வீடொன்றை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடிய இருவர், நேற்று முன்தினம் (13) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து, திருடப்பட்ட ஐ-போன் ஒன்று, நான்கு சைக்கிள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன.

சந்தேக நபர்கள், சுன்னாகம், மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 21, 22 ஆகிய வயதுகளை உடையவர்களாவர்.



## கொரோனா செய்தித் துளிகள்

■ எம். செல்வராஜா,மெய்யன், நவி, ஏ.ஏ.எம்.பாயிஸ், யோகேசன்

1. தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெலிமடை, உலங்கபொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவும், பிபிலை, கனுல்வெல கிராம உத்தியோகத்தர் பிரிவும் நேற்று (14) காலை தொடக்கம் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

2. பதுளை, ஹல்துமுல்ல பிரதேசத்திலுள்ள அரச வங்கியொன்று நேற்றிலிருந்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.
குறித்த வங்கியில் நான்கு பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதால், வங்கி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

3. ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அவர்களிருவரும் பிந்துனுவெவ கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

4. கண்டி, பன்வில பிரதேசத்தில் நேற்று முன்தினம் (12) பதிவான மரணத்துடன், இதுவரை 12 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

5. கம்பளை, புப்புரஸ்ஸ லெவலன் தோட்டத்தில் நேற்று (14) எட்டுப் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அவர்கள் குருந்துவத்த தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அத்துடன் ஐந்து குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

6. அயகம, கலதுர, மடபத்தர பிரிவில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு வாரங்களில் 155ஆக அதிகரித்துள்ளது.

7. கடந்த மாதம் 21ஆம் திகதியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த கினிகத்தேனை, கடவளைத் தோட்டம், நேற்று (14) அதிகாலை தொடக்கம் விடுவிக்கப்பட்டுள்ளது.

# ‘சர்வாதிகாரியை இடமாற்றுங்கள்’

## கொரின், ட்ரூப் தோட்டத் தொழிலாளர்கள் தொடர் போராட்டம்

■ பி.கேதீஸ்

தோட்டத் தொழிலாளர்களை தோட்ட அதிகாரி, சர்வாதிகாரமாக நடத்துகின்றார் எனத் தெரிவித்து, அத்தோட்ட அதிகாரியையும் அத்தோட்ட தலைமை குமாஸ்தாவையும் உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி, தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ட்றூப், கொரின் தோட்டத் தொழிலாளர்கள், அத்தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக 3ஆவது நாளாகவும் நேற்று (14) வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் இயங்கும் ட்றூப், கொரின் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 450க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், வீடுகளில் இருந்தவாறே தொழிலுக்குச் செல்லாமல் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இத்தோட்டத்தில், தொழிலாளர்களிடம் வழமையாக அறவிட்டு வந்த மரண பணம் தற்போது அறவிடுவதில்லை. தொழிலாளர்கள் 100 சதவீதம் வேலை செய்தால் மட்டுமே, அவர்களுக்கு வழங்கப்படும் தேயிலை தூள் வழங்கப்படுகிறது. அதில் இரண்டு நாள்கள் குறைந்தாலும் தேயிலைத் தூள் வழங்கப்படுவதில்லை.

ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, உரிய நேரத்தில் பணம் வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூட்டுறவு சங்கப் பணம், கம்பனி வழங்கினால் மாத்திரமே வழங்கப்படுகின்றமை உள்ளிட்ட பல பிரச்சினைகளை இத்தோட்ட மக்கள் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.



கொரோனா நோயாளர்களுக்கு உதவ

# இராணுவ உதவியைப் பெற தீர்மானம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு, இராணுவத்தின் உதவியைப் பெற இரத்தினபுரி மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு உள்ளது. சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாவட்ட செயலாளர் மாலனி லொகு போத்தாகம ஆகியோர், தலைமையில் நேற்று (14) நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அரச நிறுவனங்களில் நிலவும் வாகனப் பற்றாக்குறை காரணமாகவும் இப்பணிகள் பாதுகாப்பாகவும் முறையாகவும் இடம்பெறாததால் கொரோனா தொற்று துரிதமாகப் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையிலேயே நோயாளர்களை உரிய இடங்களுக்கு அழைத்துச் செல்லல் உள்ளிட்ட விடயங்களுக்கு இராணுவத்தினரின் உதவியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிருகங்களை வேட்டையாடி

# இறைச்சியை விற்றவர் துப்பாக்கியுடன் சிக்கினார்

■ கே.சுந்தரலிங்கம்



காட்டு மிருகங்களை வேட்டையாடி, இறைச்சிகளை விற்பனை செய்து வந்த நபர் ஒருவர், துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நபர், அக்கரப்பத்தனை, போபத்தலாவ வனப்பகுதியிலேயே வேட்டையாடி வந்துள்ளதாகவும் சந்தேக நபரைக் கைதுசெய்த போது, அவரிடமிருந்து 8 கிலோ கிராம் இறைச்சியும் கைப்பற்றப்பட்டு உள்ளதாகவும் அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

போபத்தலாவ, மெனிக்பாலம் கால்நடை பண்ணையில் காவலாளியாகப் பணிபுரியும் இவர், நீண்ட காலமாக இந்தச் சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அவரிடமிருந்து கைப்பற்றிய இறைச்சி, துப்பாக்கி ஆகியவற்றுடன் சந்தேகநபரை நுவரெலியா நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழைய பொலிஸ் நிலையக் காணியை

# மாத்தளை மாநகர சபை பொறுப்பேற்கவுள்ளது

■ மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை நகரின் மத்தியில் அமைந்துள்ள பழைய பொலிஸ் நிலையத்துக்குரிய காணியை, மாத்தளை நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நகர பொது வர்த்தக சந்தைக் கட்டடமாக அபிவிருத்தி செய்வதற்காக, அக்காணியை பெறும் நடவடிக்கை, இம்மாத இறுதிக்குள் முன்னெடுக்கப்படுமெனை, மாத்தளை மாநகர சபையின் மேயர் எஸ். பிரகாஸ் தெரிவித்தார். நேற்று (14) நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்த அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்தக் காணியைப் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல், பல தரப்பினருடனும் கடந்த பல நாள்களாக முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார். அத்துடன், குறித்த காணியில் அமைக்கப்பட்டுள்ள 12 பொலிஸ் உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிப்பவர்களுக்கு மாற்று நடவடிக்கையாக, வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்று, அவர்களை அங்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலில், குறித்த வாடகை வீடுகளுக்கான வாடகைப் பணத்தை, நகர சபை ஊடாகச் செலுத்தவும் பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ், ஈடு செய்வதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 25,000 ரூபாய்க்கு குறைந்த மாத வாடகையின் கீழ், வீடுகளைத் தேடிக்கொள்ள பொலிஸார் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# 77 வயது மூதாட்டி வன்புணர்வு

## குற்றவாளிக்கு வலைவிரிப்பு

■ சுமணசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாராவ, தெனகல்லந்த பிரதேச வீடொன்றில் தனியாக வசித்து வந்த 77 வயதுடைய மூதாட்டி, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென, மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (12) குறித்த பெண் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த போது, யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு, வீட்டுக்கு வெளியே வந்துள்ளார்.

இதன்போது, அவர் வீட்டுக்குப் பின்புறமாக இழுத்துச் செல்லப்பட்டு, வன்புணர்வு செய்யப்பட்டதால் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர், அப்பெண்ணின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த அவரது மகன், தனது தாய் மயக்கமடைந்து விழுந்துள்ளதை அவதானித்து அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தை அடுத்து, அவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளியைக் கைதுசெய்வதற்கான தீவிர நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆசிரிய தொழிற்சங்கத் தலைவர்களை

# உடனடியாக விடுவிக்கவும்

■ பி.கேதீஸ்

பலவந்தமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் என்.டி.எஸ். நாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இணையத்தள கற்பித்தல் நடவடிக்கைகளிலிருந்து ஆசிரியர்கள் வெளியேறினர். இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு, நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், எமக்கு நியாயமான முடிவு கிடைக்கும் வரை, எமது போராட்டம் தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்

## வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்துக்குப் பின்னர் மலையகத் தொழிலாளர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், சம காலங்களில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தின்போதே, அவர் இதைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், பெருந்தோட்ட நிர்வாக அதிகாரிகளின் அடாவடி செயற்பாட்டின் விளைவாக, பெருந்தோட்ட மலையக மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினை தொடர்பாக, தொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.



இதன்போது ஒரு மாதத்துக்குள், முதலாளிமார் சம்மேளனமும் தொழிற்சங்கங்களும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, புரிந்துணர்வுக்கு வரவில்லையெனில், பாராளுமன்றத்தில் சட்டமொன்று கொண்டுவரப்படுமென தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உறுதியளித்ததாக வடிவேல் சுரேஷ் எம்.பி மேலும் தெரிவித்தார்.

# சேதனப் பசளை உற்பத்தி வரவேற்கத்தக்கது

■ எம். செல்வராஜா

எமது நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கென ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்‌ஷவின் ‘சௌபாக்கிய நோக்கு’ என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், சேதனப் பசளை உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியதென, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது. முன்னணியின் நிதிச் செயலாளர் இரா.சலோபராஜர், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விவசாயத்துக்காக இறக்குமதி செய்யப்படும் இரசாயன பசளை வகைகள் மக்களுக்கும், விவசாய பூமிக்கும் பெரும் பாதிப்புகளையே ஏற்படுத்தி வந்துள்ளன. இப்பாதிப்பைத் தவிர்க்கும் பொருட்டு, ஜனாதிபதி சேதனப் பசளை உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்துள்ளார். இந்நாட்டு மக்களையும் எமது விவசாயப் பூமியையும் பாதுகாக்கும் பொருட்டு, ஜனாதிபதி எடுத்திருக்கும் இவ் வேலைத்திட்டம் சிறப்பானதாக அமைந்துள்ளது. இத்திட்டத்துக்கு மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புமிக்க தொழிற்சங்கமென்ற ரீதியில் ஜனாதிபதிக்கும், அவர் தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கும் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லையைக் கடக்க முடியாது

# திரும்பிய வாகனங்கள்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கினிகத்தேனை- களுகல பொலிஸ் வீதித்தடையூடாக நேற்று (14) மாகாணங்களுக்கிடையில் பயணித்த வாகனங்கள் சிலவற்றை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

அத்தியாவசிய தேவைகளுக்காகப் பயணித்த வாகனங்களுக்கு மாகாணங்களுக்கிடையில் பயணிக்க அனுமதி வழங்கப்பட்ட நிலையில், அனுமதியின்றி மாகாணங்களைக் கடக்க முற்பட்ட வாகனங்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டன.



# அடுத்த துன்பியலைத் தடுக்க விழிப்பாய் செயற்படுவோம்

அறிவுறுத்தல்கள், விழிப்புணர்வுகளைப் பின்பற்றினாலேயே எதிர்காலத்தில் முகங்கொடுக்கக்கூடிய தேவையில்லாத சிக்கல்களிலிருந்து ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே தற்பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால், பெரும்பாலானவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே வினையைத் தேடிக்கொள்கின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று, எங்கிருந்து வந்தது என்பதை ஒவ்வொருவரும் ஓரளவுக்கு ஊகித்துக் கொண்டிருப்பர். ஆனால், எவ்வாறு வந்தது என்பதற்கு, இன்னுமே விடைகாணவில்லை. எனினும், டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு, சுற்றாடல் மீது அக்கறையில்லாத ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் காரண கர்த்தாக்களாகின்றனர்.

ஒவ்வொரு நொடிப்பொழுதும் 'கொரோனா' என்ற பதமே முணுமுணுக்கப்படுகின்றது. ஆகையால், 'டெங்கு' என்பதைப் பலரும் மறந்திருப்பர். நீண்ட நாள்களாக வீடுகளுக்குள்ளே முடங்கியிருப்பதால், சுற்றுச்சூழல் அசுத்தமாகி இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால், எமது கவனக்குறைவால், டெங்கு நுளம்புகள் குடம்பிகளை இட்டு, அடுத்த கட்டத்துக்குத் தயாராகியிருக்கலாம்.

கொரோனா பேரிடருக்குள்ளும் டெங்கு தொற்றால் மரணமடைந்துள்ளனர். கடந்த காலங்களில், டெங்கு மரணங்கள் வெகுவாகப் பேசப்பட்டன என்பதையும் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்த வருடத்தில், நேற்றைய தினம் வரையான காலப்பகுதிக்குள் 9,669 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், மட்டக்களப்பு, கொழும்பு மாவட்டங்கள் முறையே முதலாம், இரண்டாம் இடங்களில் உள்ளன. ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழையுடனான வானிலை நிலவி வருவதால், வீடுகள் உட்பட மக்கள் வாழும், புழங்கும் பொது இடங்களிலும் நீர் தேங்க ஏதுவான பகுதிகளிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் சூழ்நிலைகள் சாதகமாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், இயற்கையாகத் தேங்கி- வற்றும் இடங்கள் தவிர, நீரைத் தேக்கி வைக்கக் கூடிய மற்றைய இடங்கள் அனைத்தும் உருவாக, மனிதர்களே பொறுப்பாளிகள்! ஆகையால், டெங்கொழிப்பில் கவனம் செலுத்த வேண்டியது, நம் அனைவரினதும் தலையாய கடமை என்பதை மறந்துவிடக் கூடாது.

வீடுகளையும் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது கட்டாயமாகின்றது. நீர் தேங்கி நிற்கக் கூடிய சிரட்டைகள், டயர்கள், பாத்திரங்களை உரிய முறையில் அப்புறப்படுத்தி விடுங்கள்.

அதுமட்டுமின்றி, நாம் செல்லும் பொது இடங்களிலும் நம்மால் உண்பதற்கோ, குடிப்பதற்கோ ஒரு தடவை பாவித்துவிட்டு வீசப்படும் பிளாஸ்டிக் கொள்கலன்களைப் பொருத்தமான குப்பைத் தொட்டிகளில் போட்டு, பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

இந்த டெங்கு விடயத்தில், வீட்டை மாத்திரம் சுத்தப்படுத்தி, சுயநலவாதியாக இருந்தால் போதாது. பொது இடங்களையும் பேணிப் பாதுகாத்து, சற்றுப் பொதுநலத்துடனும் நடக்க எத்தனிக்க வேண்டும். ஏனெனில், டெங்கு நுளம்புகள் பல நூறு மீற்றர்கள் பறக்கக் கூடியன என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகப் பேணுவதுடன் பொது இடங்களில் பொறுப்புடன் நடந்து கொள்வோமாயின் டெங்கைத் துரத்தி, அடுத்த துன்பியலிலிருந்து தற்பாதுகாத்துக் கொள்ளலாம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

சரித்திரம் காலத்தின் விழி. உண்மையைச் சொல்லும் சரித்திரத்தில் மக்களின் பழைய வரலாறு, நம்பவே முடியாத அவர்களின் மேலான அறிவுகள் ஆச்சரியப்படுத்துகின்றன.

எங்களின் வாழ்வியல் பெருமைகளைப் பெருமையுடன் பேசும் போது சிலர் பழைய பெருமை பேசுவதாகக் கேலி பேசுவதுண்டு. தங்கள் மொழி, இனம் மதம்பற்றிப் புகழ்ந்தால் சிலருக்கு கோபம் வந்துவிடும்.

நன்கு தெரிந்தவர்கள் சொல்லும் வாய்மை, ஆய்வுகளை ஒன்றுமே புரியாதவர் உணராமல் இருப்பது வேண்டுமென்றே சொல்லும் உளறல்.

கல்வெட்டு, சுவடிகள், பழம்பெரும் சிற்பங்கள், கட்டடங்கள், அணைக்கட்டுகள், நீரியல் ஆய்வு, கலையோடு, விஞ்ஞானம் இணைந்த படைப்பு.

பழைமையைப் பார்த்துத்தான் புதுமையே பிறக்கின்றது. கல்வி, ஞானம், இலக்கியம், பழைமையின் பெருமை சொல்லும். நீதி, நேர்மை பக்தி எல்லாமே பழைமையின் வேர்தான்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம்

# பழைமைவாத நோக்கங்களுக்கும் அப்பாற்பட்டிருத்தல் வேண்டும்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை, அர்த்தமுள்ள வகையில் திருத்துவதற்கான அமைச்சரவையின் முற்போக்கான தீர்மானத்தை, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) மற்றும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த செயற்பாட்டுக் குழு (MPLRAG) ஆகியவை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளன.

சட்ட ஏற்பாடுகள் தொடர்பான அமைச்சரவையின் நான்கு தீர்மானங்கள் தொடர்பாக, அறிக்கையொன்றின் மூலம் அவை இவ்வாறு குறிப்பிட்டுள்ளன. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முஸ்லிம் சட்டத் திருத்தங்களுக்கான ஆலோசனைக்குழு, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் (MMDA) தொடர்பான தனது அறிக்கையை 21 ஜூன் 2021 இல் நீதி அமைச்சர் எம்.யு.எம். அலி சப்ரியிடம் கையளித்துள்ளமையை நாம் வரவேற்கிறோம்.

சட்டத்திருத்தத்துக்கான காலஎல்லையும் வெளிப்படைத்தன்மையும் இக்கால கட்டத்தில் மிகவும் முக்கியமானவை என்பதுடன், ஏற்கெனவே நாம் அவதானிக்கின்றதன்படி, சட்டத் திருத்தச் செயற்பாட்டைப் பாழ்படுத்தக் கூடிய அனைத்து செயற்பாடுகளில் இருந்தும் பாதுகாத்து, சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதேவேளை, சட்டத் திருத்தங்களுக்கான பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையைத் தாமதமின்றிப் பகிரங்கப்படுத்துவதன் ஊடாக, பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு, சட்டத் திருத்தம் தொடர்பாக வரவிருக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும்படி நீதியமைச்சரைக் கோருகிறோம்.

சட்டமூல ஏற்பாடுகள் தொடர்பான அமைச்சரவையின் நான்கு தீர்மானங்கள் தொடர்பாக:

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பாக, முக்கிய சட்டப் பிரிவுகள் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானங்களை நாங்கள் வழிமொழிகிறோம்:

1) எந்தவொரு விதிவிலக்குமின்றி திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லையை 18 ஆக உயர்த்துதல்;

2) ஒரு திருமணத்தை வலிதாக்க, மணமகளது சம்மத்தையும் கையொப்பத்தையும் தேவைப்படுத்தல்;

3) பெண் காதி நீதிபதிகளை அனுமதித்தல்;

4) பலதாரமணத்தை ஒழித்தல்;

திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லை, மணமகளின் சம்மதம் மற்றும் பெண் காதி நீதிபதிகள் என்பன 2019 ஆம் ஆண்டு பெரும்பான்மையான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் ஏற்று அங்கிகரிக்கப்பட்டவை என்பதை, அமைச்சரவையின் இத்தீர்மானங்களை எதிர்ப்பவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக, இத்திருத்தங்கள் பல குழுக்களால், பல சந்திப்புகளில், பல அரசாங்கங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

'எல்லாச் சட்டத் திருத்தங்களுக்கும் இணங்குதல்' என்பது, ஒருபோதும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. இவ்விடயம், சட்டத் திருத்தத்தை இழுத்தடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதுடன், தொடர்ச்சியாக முஸ்லிம் பெண்களையும் சிறுமிகளையும் இடருக்கு உள்ளாக்கி வந்துள்ளது.

> சட்டத் திருத்தச் செயற்பாட்டைப் பாழ்படுத்தக் கூடிய அனைத்து செயற்பாடுகளில் இருந்தும் பாதுகாத்து, சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது

காலம் முழுவதும், இத்தகைய பாரபட்சமான சட்டப் பிரிவுகளால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வந்த முஸ்லிம் பெண்களைத் திட்டமிட்ட வகையில், ஆண்கள் தலைமையில் நடத்தப்பட்டு வந்த முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்த உரையாடல்களின் போது, விலத்தியே வைத்திருந்தனர்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா (ACJU) போன்ற குழுக்கள், முஸ்லிம் பெண்களை ஒருபோதும் உள்ளடக்கவில்லை என்பதுடன் முஸ்லிம் பெண்களினதும் முஸ்லிம் சிறுமிகளினதும் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளைப் பற்றி கருத்தில் கொள்ளவுமில்லை.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பான உரையாடல்களில், அரச பொறுப்புடைமை என்பது மிக முக்கியமானதொரு விடயம். இத்திருத்தங்கள், மிக நீண்டகாலமாக முஸ்லிம் பெண்கள் கோரிவருகின்ற இச்சட்டத் திருத்தத்தின் பகுதி என்பதுடன், இவை முஸ்லிம் பெண்களினது வாழ்வியல் அனுபவங்களுடனும் சிரமங்களுடனும் நேரடியாகத் தொடர்புடையனவாகும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தங்கள் கலந்தாலோசிக்கப்பட்ட அரச பொறுப்புடைமையைக் காட்டி நிற்கின்றன. இந்நான்கு திருத்தங்களையும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த செயற்பாட்டுக் குழு ஆகிய நாம், முழுமனதுடன் வரவேற்கிறோம். அத்துடன் இத்தீர்மானங்கள், பெண்கள் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படவோ அல்லது, விலத்தி வைக்கப்படவோ இல்லை என்பதை உறுதிப்படுத்தும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

காதி நீதிமன்ற முறைமை தொடர்பான அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பாக...

காதி நீதிமன்றத்துடனான முஸ்லிம் பெண்களினது வாழ்வியல் அனுபவங்கள், தீவிரமான பல பிரச்சினைகளை வெளிப்படுத்தி உள்ளன. இதன் ஊடாகப் பெண்கள் நியாயமான முறையில் நடத்துகைகூட இன்றி, பல வழிகளில் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுகின்றமையும் அடங்குகிறது.

முஸ்லிம் பெண்கள், நீதிக்கான சமத்துவமான, நியாயமான அணுகுதலைக் கொண்டிருத்தல் வேண்டும் எனத் தொடர்ச்சியாக முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த செயற்பாட்டுக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த நாம் கோரி வருகின்றோம்.

இந்தளவில், பதிலீடு என்ன என்பது பற்றிய எந்த விதமான போதியளவு தகவல்களும் இன்றி, காதி நீதிமன்ற முறைமையை இல்லாமல் ஆக்குவதற்கான அமைச்சரவையின் தீர்மானம் பற்றி நாம் கரிசனை கொண்டுள்ளோம். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம், எவ்வாறு நிர்வகிக்கப்படும் என்பது தொடர்பான தெளிவுபடுத்தல், உடனடியாக நீதியமைச்சால் வழங்கப்பட வேண்டும் என நாம் வேண்டுகிறோம்.

தற்போது நடைமுறையிலுள்ள மாவட்ட நீதிமன்ற முறைமையானது, ஏற்கெனவே அணுகுதல், தாமதம், குடும்ப நேயமற்ற முறைமை எனப் பல சவால்களைக் கொண்டிருக்கிறது. காதி நீதிமன்ற முறைமையைப் போன்று, அதுவும் பூரணமான திருத்தத்தை வேண்டி நிற்கின்றமையை நாம் புரிந்து வைத்திருக்கிறோம்.

> காதி நீதிமன்றத்தின் ஊடாகப் பெண்கள் நியாயமான முறையில் நடத்துகை இன்றி, பல வழிகளில் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை நிர்வகிக்கும் எந்தவொரு நீதிமுறைமையாயினும் அது பொதுவாக தற்போது இலங்கை பெண்கள், குடும்பங்கள் ஆகியவற்றால் அணுகப்படுகின்ற நீதிமுறைமையை விடவும் சிறந்ததாக இருத்தல் வேண்டும் எனும் நிலைப்பாட்டை நாம் உறுதியாகவும், மனப்பூர்வமாகவும் கொண்டிருக்கிறோம்.

அதாவது, நீதிமுறைமையானது தெளிவான, சமத்துவமான நடைமுறைகளுடன் இருப்பதுடன், விரோத மனப்பான்மையுடனான நடைமுறைகள் அற்றதும், நேரகாலத்தைப் பொறுத்தளவில் வினைத்திறனுடனும் இலகுவான அணுகுதலையும் உடையதாக இருப்பதுடன் முக்கியமாக குறைந்த வருமானம் உடையவர்களால் செலவைத் தாங்கக் கூடிய வகையானதாகவும் இருத்தல் வேண்டும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் மிக நீண்டகாலமாக தாமதிக்கப்படுகின்றது. திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான நெறிமுறையான செயன்முறைக்கான காத்திருப்பு என்பது, முஸ்லிம் பெண்கள் இடர்களையும் தங்களுக்கு எதிரான முற்கற்பிதங்களையும் பாரபட்சங்களையும் தொடர்ந்தும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் செய்யப்படும் வரை நாம், குறுகிய அரசியல் இலாபங்களுக்கும் பழைமைவாத குறுகிய நோக்கங்களுக்கும் எதிராகத் தொடர்ந்தும் போராடுவோம். முழுமையான முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்துக்கான நேரம் இதுவே ஆகும்.

## கடிதங்கள்

### மானிய உரங்களை தாருங்கள்

கிளிநொச்சி, இரணைமடு குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள ஒரு பகுதி விவசாயிகளுக்குரிய மானிய உரம், இதுவரை முழுமையாக வழங்கப்படாமையால் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இரணைமடு குளத்தின் கீழ், இவ்வாண்டு 17,500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை செய்கைபண்ணப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஒருபகுதி விவசாயிகளுக்கு முழுமையாகச் சிறுபோக செய்கைக்கான மானிய உரம் விநியோகிக்கப்பட்டு உள்ளதுடன், குறிப்பிட்ட ஒருதொகை, பகுதி யளவில் மானிய உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, சட்ட ரீதியாக பயிர் செய்கை மேற்கொண்டுள்ள சில விவசாயிகளுக்கு, பல்வேறு காரணங்களைக் காட்டி உர விநியோகம் தடுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், தங்களுடைய உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்று கவலை தெரிவிக்கும் விவசாயிகள், ஏக்கர் ஒன்றுக்கு 82 கிலோ கிராம் யூரியா வழங்க வேண்டிய நிலையில் 41 கிலோ கிராம் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்திம் (13) நடைபெற்ற கலந்துரையாடலின் போது, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாண்டுக்குரிய தேவையான உரம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் அதேநேரம் சேதன உரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வுகள், செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

-யது பாஸ்கரன்

## கவிஞர் பி.ஆர். பெரியசாமியின்
# 55 ஆவது நினைவு தினம்



மலையக புரட்சிப் பாவலன் கவிஞர் பி.ஆர். பெரியசாமியின் 55 ஆவது நினைவு தினம், கொழும்பில் உறவினர்களாலும் நண்பர்களாலும் நேற்று (14) நினைவு கூரப்பட்டது.

தமிழ்நாடு, சேலம் பட்டணத்தில் 1914 இல் பிறந்து, தனது 15ஆவது வயதில் இலங்கைக்கு வந்து, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக கோ. நடேசய்யரோடு இணைந்து தொழிற்சங்கப் போராட்டங்களில் கலந்துகொண்டவர் பெரியசாமி.

சோஷலிசமே தொழிலாளர்களின் விடுதலை என்றெண்ணி, லங்கா சமசமாஜ கட்சியில் இணைந்து, தொழிற்சங்கப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டவர். 1966ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் திகதி நோய்வாய்ப்பட்டு, தனது 52 ஆவது வயதில் மரணமானார்.

1960களின் முற்பகுதியில், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் ஆரம்பித்த காலகட்டத்தில் மன்றத்துடன் இணைந்து, மன்ற செயற்பாடுகளில் ஹட்டன், நாவலப்பிட்டி, கண்டி என்று பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டவர்.

கங்காணிமார் சங்கத்தின் சார்பாக வெளிவந்த 'மலைநாடு', 'வளநாடு' என்ற பத்திரிகைகளின் ஆசிரியராவார். இவர் 1957 இல் எழுதிய 'தோட்டத் தொழிலாளர்கள் வீரப்போராட்டம்' என்ற நூலை டயஸ் பிளேஸ் நல்வழிப்பதிப்பகம் வெளியிட்டது.

மலையக மக்களின் போராட்ட வரலாறுகள் அடங்கிய அந்த அரிய வகையான ஆவணத்தை, இவரது 55 ஆவது ஆண்டு நினைவு நாளில் முன்னாள் அமைச்சர் பி.பி. தேவராஜ், தெளிவத்தை ஜோசப், போராசிரியர் சோ. சந்திரசேகரன், மு. நித்தியானந்தன் ஆகியோரின் வாழ்த்துரை, கருத்துரைகளோடு மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

என்.எஸ்.எம். இராமையாவின் புதல்வர், ஓவியக் கலைஞர் கௌசிக்கின் அரிய புகைப்படங்களுடன் எச்.எச். விக்கிரமசிங்கவே இதனை மீளப் பதிப்பித்து இருக்கின்றார்.

குமரன் அச்சகம் மிகச் சிறப்பாகப் பிரசுரித்த இந்த நூலில், தோட்டத் துரைமாரின் அராஜகப் போக்குகளை, கவிஞர் பி.ஆர். பெரியசாமி நேருக்கு நேராய்ச் சந்தித்த அனுபவத் தழும்புகளின் வெளிப்பாடு இந்நூல்.

அந்தக் கொடிய காலத்தைத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட கொடூர சூழலை, நெஞ்சிலே தணல் எடுத்து வார்த்தைகளில் வார்த்திருக்கிறார் கவிஞர் பெரியசாமி. பல போராட்டங்களில் பங்கெடுத்து உழைத்த அனுபவத்தை, நெஞ்சுயர்த்தி ஆத்மார்த்தமாகப் பிரகடனம் செய்யும் வலிமை கொண்ட ஒரு பாணனின் முரசொலி இதுவாகும்.

கோ. நடேசய்யரின் புரட்சிகரத் தொழிற்சங்கப் பட்டறையில் தீட்டப்பட்ட போர்வாள் அவர். கவிதையில், பாடலில், பிரசங்கத்தில், தொழிற்சங்கச் செயற்பாட்டில், போராட்டத்தில் அவரது உயிர், ஜீவன் கொண்டிருக்கின்றது என்று மு. நித்தியானந்தன் பதிவு செய்திருக்கின்றார்.

தமது அரசியல் நெடும்பயணத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக, பெரியசாமி, தமது சொந்த வாழ்க்கை மேம்பாடு பற்றிக் கருத்தில் கொள்ளாது, போராட்ட வீரனாகச் செயற்பட்டவர் என்று பேராசிரியர் சோ. சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை

### சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளாகியும் வறுமை ஒழியவில்லை
# உயர் நீதிமன்றம் வேதனை



சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் இந்தியாவில் வறுமை ஒழிக்கப்படவில்லை. அடிப்படைக் கல்வி முழுமையாக வழங்கப்படவில்லை என, சென்னை உயர் நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பொதுப்பணித்துறை மேற்கொள்ளும் சாலைப் பணிகள், நடைபாதைப் பணிகள், அரசாங்க அலுவலகங்கள் கட்டுமானப் பணிகளின் தரத்தைப் பரிசோதிக்கக் கோரி, சென்னையைச் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ணா பகவத் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய அமர்வில் நேற்று (14) விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அரசாங்கத்தால் அமைக்கப்படும் சாலைகள், ஆறு மாதங்கள் நீடிப்பதில்லை எனவும், அவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்வதில்லை எனவும் தெரிவித்தார்.

இதையடுத்து, மனுவுக்கு நான்கு வாரங்களில் பதிலளிக்கும்படி, தமிழக அரசாங்கத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், சாலைகள், கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக விதிகள் உள்ளதாகவும், அவற்றை அமல்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினர்.

சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் வறுமை ஒழிக்கப்படவில்லை எனவும் நீதிபதிகள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

செஞ்சி

# மாணவி சடலமாக மீட்பு; காதலன் கைது



செஞ்சி அருகே காணாமல் போன பாடசாலை மாணவியொருவர், மர்மமான முறையில் கிணற்றில் இறந்து கிடந்துள்ளார். இச்சம்பவத்தில் குற்றவாளிகளைக் கைது செய்ய வலியுறுத்தி கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அடுத்த கொங்கரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 14 வயது மாணவி, அரசாங்க உயர்நிலைப் பாடசாலையில் 9ஆம் வகுப்பு படித்து வந்தார். இவரைக் கடந்த சில நாள்களாகக் காணவில்லை.

இது குறித்து செஞ்சி அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் குடும்பத்தினர் புகார் செய்தனர். அதில் மணியம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவன், மகளை கடத்திச் சென்றதாக கூறியிருந்தார்.

இந்நிலையில் கொங்கரப்பட்டு கிராமத்தில் விவசாயக் கிணற்றில் மாணவியின் உடல் மிதந்தது தெரிய வந்தது. மாணவியை வன்புணர்ந்து, கொலை செய்து கிணற்றில் வீசியுள்ளனர். தீயணைப்பு வீரர்கள் உடலை மீட்டனர். பிரேத பரிசோதனைக்கு முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முயன்ற போது பொதுமக்கள் சாலை மறியல் செய்தனர்.

செஞ்சி பொலிஸார் மணியம்பட்டைச் சேர்ந்த சிறுவனையும் அவனது நண்பர்களையும் கைது செய்தனர்.

# கொரோனா காலத்தில் கன்வர் யாத்திரை ஏன்?
### உ.பி. அரசிடம் உச்சநீதின்றம் கேள்வி



உத்தர பிரதேச மாநிலம் கன்வர் யாத்திரைக்கு அனுமதி அளித்துள்ள நிலையில் உச்சநீதிமன்றம் தானாக முன்வந்து இந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ளது.

கன்வர் யாத்திரை ஜூலை 25 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் முதல் வாரம் வரை நடைபெற இருக்கிறது. உத்தர பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், புதுடெல்லி, இமாச்சல பிரதேசத்தில் இருந்து யாத்ரிகர்கள் ஹரித்வார் செல்வார்கள்.

உத்தரகாண்ட் அரசு கொரோனா வைரஸ் தொற்றின் 3ஆவது அலை எச்சரிக்கை காரணத்தால், கன்வர் யாத்திரையை ரத்து செய்துள்ளது.

"கடவுள் கூட மக்கள் இறப்பதை விரும்பமாட்டார். நாங்கள் இதுகுறித்து அதிகாரிகள், அருகில் உள்ள மாநில அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினோம். அதன்பின் ஹரித்வார் கொரோனா தொற்றின் மையமாகிவிடக் கூடாது என்பதால் கன்வர் யாத்திரை ரத்து என்ற முடிவை எடுத்துள்ளோம்" என அம்மாநில முதலமைச்சர் புஷ்கர் சிங் தமி தெரிவித்துள்ளார்.

ஆனால், உத்தர பிரதேச மாநில அரசு, கன்வர் யாத்திரைக்கு அனுமதி அளித்துள்ளது. உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் குறிப்பிட்ட நபர்களுடன் ஜூலை 25இல் இருந்து கன்வர் யாத்திரை நடைபெறும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா நெறிமுறையை முழுமையாக பின்பற்றுவது உறுதி செய்யப்பட வேண்டும். கன்வர் யாத்திரையின் பாதுகாப்பான மற்றும் வெற்றிகரமான செயல்பாடு குறித்து எந்தத் தயக்கமும் இருக்கக்கூடாது" எனவும் தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால் யாத்ரிகர்களுக்கு பி.சி. ஆர் நெகட்டிவ் சான்றிதழ் கட்டாயமாக்கப்படலாம் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் உச்சநீதிமன்றம், தானாக முன்வந்து இந்த விவகாரத்தை கையில் எடுத்துள்ளது. உத்தர பிரதேச மாநில அரசுக்கு, அனுமதி கொடுத்தது குறித்து பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதேபோல் மத்திய அரசுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அத்துடன் இந்த வழக்கு மீண்டும் வெள்ளிக்கிழமை விசாரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் 3 கோடிக்கும் மேற்பட்ட சிவன் பக்தர்கள் பல்வேறு மாநிலங்களில் இருந்து ஹரித்வார் சென்று கங்கை ஆற்றில் நீர் எடுத்துக் கொண்டு, அவரவர் ஊரில் உள்ள சிவன் கோவிலில் அபிஷேகம் செய்து வழிபடுவார்கள்.

சிக்கபல்லாபூர்

# நந்திமலைக்கு செல்ல தடை



> நந்திமலையில் சனி, ஞாயிறுகளில் மக்கள் குவிந்ததால் கொரோனா அச்சம் ஏற்பட்டுள்ளது

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், வார இறுதி நாள்களில், நந்திமலைக்குச் செல்லத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


கொரோனா பரவல் குறைந்து வரும் நிலையில், ஓராண்டுக்கும் மேலாக வீடுகளில் முடங்கிக் கிடந்தவர்கள், சுற்றுலா தலங்களுக்கு அதிக அளவில் படையெடுக்கின்றனர். ஊரடங்கு தளர்வுக்கு பின், கடந்த மாதம், 11ஆம் திகதி முதல், சிக்கபல்லாபூரின் நந்திமலையில், நூற்றுக் கணக்கானோர் திடீரெனக் குவிந்ததால், கொரோனா பரவும் அச்சம் எழுந்துள்ளது.

சனிக்கிழமை (10), ஞாயிற்றுக்கிழமைகளில் ஆயிரக்கணக்கானோர் குவிந்துள்ளனர். எங்கு பார்த்தாலும் கூட்டம், கூட்டமாக இளைஞர் பட்டாளத்தைச் காண முடிந்தது.

இந்நிலையில், கொரோனா தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தும் வகையில், அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை, வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியிலிருந்து, திங்கட்கிழமை காலை 6.00 மணி வரை, நந்திமலையில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கௌஹாத்தி

### சட்டசபையில் புதிய சட்டமூலம் தாக்கல்
# மாட்டிறைச்சிக்கு அசாமில் கட்டுப்பாடு



மாட்டிறைச்சி விற்பனைக்கு கடும் கட்டுப்பாடுகளை விதிக்கும் அசாமின் புதிய சட்டமூலத்துக்கு, எதிர்க்கட்சியான காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அசாமில் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான, பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறுகிறது. இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவது, மாட்டிறைச்சி விற்பனை உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்தும் வகையில், புதிய சட்டமூலம் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது: ஹிந்து, சீக்கியர், ஜெயின் கோவில்கள் அமைந்துள்ள பகுதியில், 5 கிலோ மீற்றர் சுற்றளவில் மாட்டிறைச்சி விற்கக் கூடாது.

அண்டை நாடான வங்கதேசத்துக்கு இறைச்சிக்காக மாடுகள் கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில், வாகனங்களில் கால்நடைகளை ஏற்றிச் செல்வதற்கு முன் அனுமதி பெற வேண்டும். விதிகளை மீறுவோருக்கு, அதிகபட்சம் எட்டு ஆண்டுகள் சிறை தண்டனை, 5 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவள்ளூர்

### புதுகும்மிடிபூண்டி
# கோவில் குளத்தில் மூழ்கி குழந்தைகள் உட்பட ஐவர் பலி



திருவள்ளூர், புதுகும்மிடிபூண்டி கோவில் குளத்தில் மூழ்கி 2 பெண்கள், 3 குழந்தைகள் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், புதுக்கும்மிடி பூண்டியில் அங்காளம்மன் கோவில் உள்ளது. இதன் அருகிலேயே கோவில் குளமும் உள்ளது. இக்குளத்தில் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் துணி துவைப்பது வழக்கம். அதன்படி, நேற்றுக்காலை புதுக்கும்மிடிபூண்டியைச் சேர்ந்த இரண்டு தாய்மார், துணிகளைத் துவைக்கச் சென்றுள்ளனர். இவர்களுடன் குழந்தைகளும் சென்றுள்ளன.

இரண்டு தாய்மார்களும் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்த போது, குழந்தைகள் குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு குழந்தை குளத்தில் இறங்கியது. இதைக்கண்டதும் மற்ற குழந்தையும் குளத்தில் இறங்கியதால் தண்ணீரில் மூழ்கி கூச்சலிட்டுள்ளனர். இதைக்கண்ட தாய்மார்கள் பதற்றத்துடன் குழந்தைகளை மீட்க குளத்தில் இறங்கிய போது சேற்றில் சிக்கி அவர்களும் தண்ணீரில் மூழ்கினர். சிறிது நேரத்தில் 5 பேரும் தண்ணீருக்குள் மூழ்கி மூச்சுத்திணறி பலியாகினர்.

இதையறிந்த சிப்காட் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து குளத்தில் இறங்கி 5 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். குளத்தில் மூழ்கி இரண்டு பெண்கள் உட்பட மூன்று குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியது.



சென்னை

### வண்டலூர் பூங்காவில்
# சிங்கங்கள் உயிரிழப்பில் மர்மம்

வண்டலூர் பூங்காவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, இரண்டு சிங்கங்கள் ஏற்கெனவே, உயிரிழந்துள்ளன. இந்நிலையில், மேலும் இரண்டு சிங்கங்கள் உயிரிழந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக வண்டலூர் உயிரியல் பூங்கா வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் உயிரியல் பூங்காவில், 2,300க்கும் மேற்பட்ட பறவைகள், விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள, 11 சிங்கங்களில், ஒன்பது சிங்கங்களுக்கு கொரோனா தொற்றுப் பாதிப்பு இருப்பது, அண்மையில் உறுதியானது. அதில், 'நீலா' என்ற பெண் சிங்கம், மருத்துவ பரிசோதனை முடிவுகள் வெளியான அன்றே இறந்தது. பின்னர், மற்றுமொரு ஆண் சிங்கமும் இறந்துள்ளது.

இதையடுத்து, மற்ற சிங்கங்கள், தீவிர மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. எனினும், வயது முதிர்வால், ஆரம்பம் முதலே, இரு சிங்கங்களின் உடல் நிலையும், மருத்துவ சிகிச்சைக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டும், சமீபத்தில் அவை இறந்து விட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. எனினும் பூங்கா நிர்வாகம், இது பற்றி தகவல்களை தெரிவிக்காததால், இந்த விவகாரத்தில் மர்மம் நீடிக்கிறது.

தென்னாபிரிக்கா

முன்னாள் ஜனாதிபதி ஸுமா சிறையில் அடைப்பு:

# உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72ஆக அதிகரிப்பு

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஸுமா சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், தென்னாபிரிக்காவின் பகுதிகளை வன்முறை சூழ்ந்ததில் அங்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது.



இதில், சொவெட்டோவிலுள்ள கொள்வனவு நிலையம் ஒன்றில் திங்கட்கிழமை (12) இரவு இடம்பெற்ற கொள்ளை ஒன்றின்போது, சனநெருக்கடியில் கொல்லப்பட்ட 10 பேரும் உள்ளடங்குகின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் ஆரம்பித்த வன்முறையானது தொடருகின்ற நிலையில், பொலிஸாருக்கு உதவுவதற்காக இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வன்முறைகளைத் தூண்டியதாக 12 பேரை அடையாளம் கண்டுள்ளதாக அறிக்கை ஒன்றில் குறிப்பிட்ட பொலிஸார், மொத்தமாக 1,234 பேர் கைது செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

குவாஸுலு-நடடால், கௌடெங் மாகாணங்களிலுள்ள பெரிய, சிறிய நகரங்களில் தீ வைக்கப்பட்டுள்ளதுடன், நெடுஞ்சாலைகள் முடக்கப்பட்டுள்ளதுடன், வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இந்நிலையில், கொள்ளை தொடர்ந்தால் அப்பகுதிகளில் அடிப்படை உணவு விநியோகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அமைச்சர்கள் தெரிவித்தபோதும், அவசர நிலையைப் பிரகடனப்படுத்த மறுத்துள்ளனர்.

ஈரான்

திருமணத்தை முன்னெடுப்பதற்கு

# ஈரானில் 'டேட்டிங்' செயலி

ஈரானில் நிலைக்கக் கூடிய திருமணங்களை முன்னெடுப்பதற்காக 'டேட்டிங்' செயலி ஒன்றை ஈரான் அறிமுகப்படுத்தியுள்ளது.



ஈரானில் விவாகரத்து சதவீதம் அதிகரிப்பதுடன், பிறப்பு வீதமும் வீழ்ச்சியடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய பிரசார நிறுவனத்தின் பிரிவு ஒன்றாலேயே 'துணை' என பேர்சியன் மொழியில் அர்த்தப்படும் 'ஹம்டான்' எனப்படும் குறித்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிரந்தரமான திருமணத்தை, ஒரு மனைவியை எதிர்பார்க்கின்ற திருமணமாகாதவர்கள் துணையைக் கண்டுபிடிப்பதற்கு செயற்கை நுண்ணறிவை இச்செயலி பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணத்துக்கு வெளியேயான ஒருமித்த பாலியல் உறவுகளும் ஈரானியச் சட்டத்தின்படி குற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்

வைத்தியசாலை தீ:

# உயிரிழப்பு 92 ஆக உயர்வு



ஈராக்கிய நகரமான நஸ்ரியாவிலுள்ள வைத்தியசாலை ஒன்றின், கொரோனா தனிமைப்படுத்தல் தொகுதியின் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீயில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 92ஆக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், தவறான மின்னிணைப்பு காரணமாக ஏற்பட்ட பொறிகள், ஒட்சிசன் தாங்கி ஒன்றுக்கு பரவிய நிலையிலே வைத்தியசாலையில் தீ ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், 13 பேருக்கு எதிரான பிடி விறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அவுஸ்திரேலியா

நீரிழிவுக்கான நோவில்லாத

# இரத்த சீனி சோதனை



நீரிழிவுக்கான நோவில்லாத இரத்தச் சீனி சோதனையைக் கண்டுபிடித்துள்ளதாக அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், எச்சில் மூலம் குளுக்கோஸ் மட்டங்களைச் சோதிக்கும் 'ஸ்றிப்' ஒன்றின் மூலமே இச்சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சோதனைக்கு வழமையான சோதனையை விட செலவும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இதே முறையில் கொரோனா, ஒவ்வாமை, ஓமோன், புற்றுநோய் போன்றவற்றையும் கண்டறியும் சோதனை செய்யப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளம்

# பிரதமராகப் பதவியேற்ற ஷேர் பஹதுர் டெயுபா

நேபாளத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான ஷேர் பஹதுர் டெயுபா பிரதமராக நேற்று முன்தினம் (13) பதவியேற்றுள்ளார்.



அந்தவகையில், ஐந்தாவது தடவையாக 74 வயதான டெயுபா பதவியேற்றுள்ளார்.

275 பேரைக் கொண்டுள்ள நேபாள பாராளுமன்ற கீழ்ச்சபையில் 149 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதாக டெயுபா தெரிவித்துள்ளார். ஒரு மாதத்துக்கிடையில் கீழ்ச் சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் டெயுபா வெல்ல வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு போதும் தனது பதவிக் காலத்தை முழுமையாக டெயுபா பூர்த்தி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், இம்முறையும் அடுத்தாண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் வரையிலேயே டெயுபா பதவி வகிக்கவுள்ளார்.

எத்தியோப்பியா

# திக்ரேயில் போராளிகள் முன்னேற்றம்



எதியோப்பியாவின் திக்ரே பிராந்தியத்தில் உள்ள போராளிகள் தெற்கு நோக்கி முன்னேறுவதாகவும், அரசாங்கப் படைகளிடமிருந்து நகரமொன்றை மீளக் கைப்பற்றி உள்ளதாகவும் நேற்று முன்தினம் (13) தெரிவித்துள்ளன.

இந்நிலையில், குறித்த நகரத்தை யார் கட்டுப்படுத்துவதாகத் தெரிவித்திருக்காத எதியோப்பிய இராணுவப் பேச்சாளர் கேணல் கெட்னெட் அடானே, தாங்கள் யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி உள்ளதாகக் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானை வெள்ளையடித்தது இங்கிலாந்து

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் பாகிஸ்தானை இங்கிலாந்து வெள்ளையடித்துள்ளது.



மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த இங்கிலாந்து, பேர்மிங்ஹாமில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வெற்றியைத் தொடர்ந்தே 3-0 என பாகிஸ்தானை வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

பாகிஸ்தான்: 331/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 158 (139), மொஹம்மட் றிஸ்வான் 74 (58), இமாம்-உல்-ஹக் 56 (73) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிறைடன் கார்ஸே 5/61, சஃஹிப் மஹ்மூட் 3/60)

இங்கிலாந்து: 332/7 (48 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேம்ஸ் வின்ஸ் 102 (95), லூயிஸ் கிரேகரி 77 (69), ஸக் குறொலி 39 (34), பில் ஸோல்ட் 37 (22), பென் ஸ்டோக்ஸ் 32 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹறிஸ் றாஃப் 4/65, ஷடாப் கான் 2/61)

போட்டியின் நாயகன்: ஜேம்ஸ் வின்ஸ்

தொடரின் நாயகன்: சஃஹிப் மஹ்மூட்

# ஒலிம்பிக்கிலிருந்து விலகிய பெடரர்

டோக்கியோ ஒலிம்பிக்கிலிருந்து உலகின் ஒன்பதாம் நிலை டென்னிஸ் வீரரான றொஜர் பெடரரும் விலகியுள்ளார்.



புற்தரை பருவகாலத்தின்போது முழங்கால் காயம் ஒன்று தனக்கு ஏற்பட்டதாக சுவிற்ஸர்லாந்தின் பெடரர் தெரிவித்துள்ளார்.

40 வயதாகும் பெடரர் கடந்தாண்டு இரண்டு முழங்கால் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு ஓராண்டுக்கு மேலாக அதிலிருந்து மீண்டு வந்து இவ்வாண்டு மார்ச் மாதத்திலேயே போட்டிகளுக்குத் திரும்பியிருந்தார்.

பெய்ஜிங்கில் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் இரட்டையர் போட்டிகளில் தங்கம் வென்றிருந்த பெடரர், தனிநபர் போட்டிகளில் 2012ஆம் ஆண்டு இலண்டனில் வெள்ளிப் பதக்கத்தையே பெற்றிருந்தார்.

இதேவேளை, பெடரர் தவிர, உலகின் மூன்றாம் நிலை வீரரான ரஃபேல் நடால், ஐக்கிய அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் உள்ளிட்டோரும் ஒலிம்பிக்கிலிருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏ.சி மிலனுக்குச் செல்லும் ஜிரூட்?



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனால் கைச்சாத்திடப்படுவதை இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் முன்களவீரரான ஒலிவியர் ஜிரூட் நெருங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏ.சி மிலனுடன் இரண்டாண்டு ஒப்பந்தத்தில் 34 வயதான ஜிரூட் இவ்வார முடிவில் கைச்சாத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொரு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலிருந்து கடந்த 2018ஆம் ஆண்டு செல்சியில் இணைந்த ஜிரூட், கடந்த மாதம் தனது ஒப்பந்தத்தை அடுத்தாண்டு வரை நீடித்திருந்தார்.

செல்சிக்காக 119 போட்டிகளில் விளையாடி 39 கோல்களை ஜிரூட் பெற்றிருந்தார்.

கடந்த பருவகாலத்தில் கை ஹவேர்ட்ஸ், டிமோ வேர்னரை செல்சி கைச்சாத்திட்டிருந்த நிலையில், கடந்த பிறீமியர் லீக் பருவகாலத்தில் எட்டுப் போட்டிகளையே ஜிரூட் ஆரம்பித்திருந்தார்.

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய அயர்லாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அயர்லாந்து வென்றுள்ளது.




மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் முடிவேதும் பெறப்பட்டிருக்காத நிலையில், மலஹிட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியிலேயே 43 ஓட்டங்களால் அயர்லாந்து வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

அயர்லாந்து: 290/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: அன்டி போல்பிரயன் 102 (117), ஹரி டெக்டர் 79 (68), ஜோர்ஜ் டொக்ரல் 45 (23), அன்டி மக்பிரயன் 30 (47), போல் ஸ்டேர்லிங் 27 (44) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்டிலி பெஃலுவாயோ 2/73, தப்ரையாஸ் ஷம்சி 1/42, கேஷவ் மஹராஜ் 1/50, ககிஸோ றபாடா 1/58)

தென்னாபிரிக்கா: 247/10 (48.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜனமென் மலன் 84 (96), றஸி வான் டர் டுஸன் 49 (70) ஓட்டங்கள். பந்துவீச்சு: அன்டி மக்பிரயன் 2/34, ஜோஷுவா லிட்டில் 2/45, மார்க் அடைர் 2/43, கிரேய்க் யங் 1/34, ஜோர்ஜ் டொக்ரல் 1/37, சிமி சிங் 1/44)

போட்டியின் நாயகன்: அன்டி போல்பிரயன்

# றோமாவுக்குச் செல்லும் பற்றிசியோ



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான வொல்வர்ஹம்டன் வொண்டரேர்ஸின் கோல் காப்பாளரான ருய் பற்றிசியோவை, இத்தாலிய சீரி ஏ கழகமான றோமா கைச்சாத்திட்டுள்ளது.

அந்தவகையில், 33 வயதான பற்றிசியோவுக்காக 10 மில்லியன் யூரோக்களை றோமா செலுத்தியுள்ளதாகக் கருதப்படுகிறது.

வொல்வ்ஸில் கடந்த 2018ஆம் ஆண்டு பற்றிசியோ இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது றோமாவின் முகாமையாளராக ஜொஸே மொரின்யோ பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 15 ஜூலை 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.